**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20.03.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் சுழற்சாவி தொழிலாளர் பயிற்சி நிறைவு

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்திலுள்ள புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறை, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தி அமைச்சகத்தின் நிதியுதவி பெற்று செயல்படும் சாண எரிவாயு மற்றும் பயிற்சி மையத்தின் (BDTC) மூலம் பல்வேறு மாவட்டத்திலிருந்து வருகை புரிந்திருந்தவர்களுக்கு சுழற்சாவி தொழிலாளர் பயிற்சி 05.03.2025 அன்று தொடங்கப்பட்டது. இப்பயிற்சி 05.03.2025 முதல் 19.03.2025 வரை பதினைந்து நாட்களுக்கு நடத்தப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுமார் இருபது பயனாளர்கள் கலந்துகொண்டனர். முனைவர் வெ. பழனிசெல்வம் வரவேற்புரை அளித்தார். புதுப்பிக்கவல்ல ஆற்றல் பொறியியல் துறையின் தலைவர் மற்றும் சாண எரிவாயு மேம்பாடு மற்றும் பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் தே.ரமேஷ் பயிற்சியின் முக்கிய அம்சங்களை சுருக்கமாக கூறி பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். முனைவர் பொ. விஜயகுமாரி இணை பேராசிரியை நன்றியுரையாற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**